முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் தை மாதம் 01 திகதி முதல்

சுபகிருது வருடம் தை மாதம் 08 திகதி வரை

(15.01.2023 ஞாயிறு முதல் 22.01.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானபண்டிதனே சண்முக வேலே
   நன்மைபுரிய கலியினில் அவதாரம்
   ஞானதேசிகனாய் நிகழ்த்தி இருக்க
   ஞாலமதில் அரங்கமகான் பெருமைகூறி
2. கூறியே சுபகிருது கலையின் திங்கள்
   குறைவிலா முதல்திகதி மேல் அட்டம திகதி வரை
   தெரிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
   தற்காலம் நடக்கும் வார நிகழ்வாக
3. நிகழ்வாக வருங்கால பலன் குறித்த
   நிலமதனில் வார ஆசிதன்னை
   அகத்திய மகரிஷியும் உரைப்பேன்
   ஆற்றல் மிக்க அரங்க மகான் வழிதனை
4. வழிதனை இந்தியா தமிழக ஆளுமை
   வணங்கி வழிமொழிந்து வர
   பழிபாவம் நேரா ஆளுமையாக
   பசிபிணி விரட்டும் ஆளுமையாக
5. ஆகவே மாற்றம் கண்டுமே
   ஆற்றல் மிக்க ஞான ஆட்சியாக
   செகம் வியக்க தேற்றம் பெறும்
   செப்பிட ஆனாலும் நடப்புகாலம்
6. காலமதும் சேவை மறந்துமே
   காக்க உண்டான நிலையிலா
   ஊழல் மலிந்த துறையாக
   ஒவ்வொரு துறையும் வளர்ந்து வர
7. வருகின்ற இந்தநிலை தொடர்ந்தால்
   வறுமை பொருளாதார பலமிலா
   தருகின்ற உயர்குணம் குறைந்து
   தகாத வழிமுறைகளாக மாறும்
8. மாறியே ஆளுமைக்கு பின்னடைவு
   மக்களை காக்கத் தவறிய நிலையாக
   மாறியே இந்தியா தமிழகம் தானும்
   மறுமலர்ச்சி எவ்வகையும் காணா

**9.** காணா தேக்கமும் மிகுதியாகி
கலித்துன்பமாக பெருக நேரும்
ஞானமாம் அரங்கன் சன்மார்க்க
ஞானநெறிமுறைகளை இனியேனும்
**10.** இனியேனும் ஏற்று ஆளுமைகள்வர
இருந்துவரும் சகல அவலங்களும் மாறி
கனிவேலன் ஆசிஅருள் பெற்ற
கருணைமிகுந்த ஞானஆட்சியாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் தை மாதம் முதல் நாள் **15.01.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் **8**ம் நாள் **22.01.2023** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

ஞானத்திற்கு தலைவனான ஞானபண்டிதனே சண்முக வேலனே. இந்த கலியுகத்தினில் மக்களின் துன்பங்களை போக்கி அவர்களை காத்து ரட்சிக்கவே ஆறுமுக அரங்க மகானாய் அவதரித்திருக்க இவ்வுலகமெலாம் அரங்க மகான் பெருமையை கூறியே சுபகிருது வருடம் தை மாதம் முதல் நாள் **15.01.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் **8**ம் நாள் **22.01.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் இந்தியா தமிழகத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தர்மத்தின் வழி சொல்லி சத்தியத்தின் பாதையில் தயவுடன் நடந்து எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி இரங்கி இதம் புரியும் உண்மை ஞான நெறியை ஆறுமுக அரங்க மகான் கூறும் ஆற்றல் மிக்க தூய ஞான நெறியினை மக்களை ஆட்சி செய்வோர் முழுமனதோடு ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து வந்திட அவர்களது ஆட்சியானது பழிபாவம் இல்லாத ஆட்சியாக பசிப்பிணி இல்லாத ஆட்சியாக மாற்றம் அடையும். மக்கள் இன்பமுடன் வாழும் ஞான ஆட்சியாக அமையும் உலகமே கண்டு வியக்கின்ற தூய ஆட்சியாக அமைந்து அற்புதமாய் மேன்மையுறும்.

ஞானம் சிறந்து விளங்கும் ஞானிகள் துணை கொண்ட இந்திய தமிழக தேசத்தினிலே இக்காலத்திலே மக்களை ஆட்சி புரிவோரில் சிலர் தாம் வந்த நோக்கம் மறந்து, மக்களுக்கு சேவை செய்யும் நோக்கம் மறந்து மக்களை காத்திடும் கடமையும் மறந்துமே சுயநலம் மிகுதியாகி நாட்டின் ஒவ்வொரு துறையிலும் ஊழல் மலிந்து போய்விட்டதப்பா. இப்படிப்பட்ட மோசமான நிலை அரசின் அனைத்து துறைகளிலும் மேலும் தொடர்ந்து வந்தால் நாட்டின் பொருளாதாரம் வலுவிழந்து போய் வறுமையான சூழல் மிகுதி உண்டாகும். பிறருக்கு உதவும் குணம் மக்களிடமும் அரசிடமும் வெகுவாக குறைந்து தகாத முறைகளிலே நாட்டினில் மக்களில் பலர் ஈடுபட்டு மோசமான சூழல் உருவாகுமப்பா.

நாட்டின் அமைதி குலைந்து நாட்டை ஆட்சி புரிவோர்க்கு பின்னடைவு உண்டாகுமப்பா. மக்களை காக்க தவறிய ஆட்சியாக மாறிடுமப்பா. எந்தவிதமான முன்னேற்றமோ இல்லாமல் மறுமலர்ச்சி அற்ற நாடாக மாறியே எல்லா துறைகளிலும் முடக்கம் உண்டாகி அதுவே கலியுகத்தின் துன்பமாக மாறி மக்கள் எல்லாம் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாக நேரிடுமப்பா.

ஆதலினாலே மக்களே, நாட்டை வழிநடத்தும் பொறுப்பில் உள்ளவர்களே இனிமேலாகினும் விழித்தெழுங்கள் ஞானத்தை அருளும் ஆறுமுக அரங்க மகான் கூறும் நன்மைமிக்க சன்மார்க்க ஞான நெறிமுறைகளை இனிமேலாயினும் முழுமனதோடு ஏற்றுக் கொண்டு நம்பிக்கை வைத்து கடைப்பிடித்து வந்தால் இதுவரை நாட்டினில் நடந்து வருகின்ற அவலங்கள் எல்லாம் மாற்றம் அடைந்து கனிவேலன் முருகப்பெருமானின் ஆசியை முழுமையாகப் பெற்றிட்ட கருணை மிகுந்த ஞான ஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–